செய்தி வெளியீடு எண்: 406 நாள் : 30.07.2013

**பத்திரிக்கை செய்தி**

**காவிரி டெல்டா விவசாயிகளின் நலன் கருதி, வரும் 2.8.2013 அன்று மேட்டூர் அணை திறக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதை தொடர்ந்து மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் உயர் அலுவலர்களுடன் அவசர ஆலோசனை**

காவிரிநீர் பிடிப்பு பகுதியில் கனமழை பெய்ததன் காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் 100அடிக்கு மேல் உயர்ந்துள்ள நிலையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் காவிரி டெல்டா பாசனத்திற்கு வரும் 02.08.2013 முதல் மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படும் என அறிவித்து உள்ளார்கள். இந்நிலையில் காவிரி டெல்டா பாசனப் பகுதிகளிலும் மற்றும் ஏனைய நீர்த்தேக்கத் திட்டங்கள் மூலம் பயன்பெறும் மாவட்டங்களான சேலம், ஈரோடு, மற்றும் தருமபுரி மாவட்டங்களிலும் விவசாயிகளுக்கு புதிய கடன்கள் தங்குதடையின்றி வழங்கவும், விவசாயத்திற்கு தேவையான உரம் தடையின்றி கிடைக்க போதிய அளவில் இருப்பு உள்ளதை உறுதி செய்யவும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தலைமையில் இன்று (30.07.2013) பிற்பகல் 2.30 மணியளவில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அலுவலகத்தில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பயிர்க்கடன் வழங்குவதற்கு வங்கிகளில் உள்ள போதிய நிதி வசதி, மறுநிதி உதவி பெறுதல், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு விவசாய காசுக்கடன் அனுமதித்தல், தேவைப்படும் உரம், விதைகள் மற்றும் பூச்சிகொல்லி மருந்துகள் போன்றவை போதிய அளவுக்கு இருப்பு வைத்தல், போன்றவை குறித்தும், கடந்த ஆண்டு வழங்கப்பட்ட பயிர்க்கடன்களை மத்தியக் காலக்கடன்களாக மாற்றப்பட்டது, மத்தியக் கால கடன்களாக மாற்றப்பட்ட விவசாயிகளுக்கு மீண்டும் பயிர்க்கடன் உரிய காலத்தில் வழங்குவது, புதிய உறுப்பினர்கள், எஸ்.சி/எஸ்.டி உறுப்பினர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கடன் இலக்குகளை எய்தும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வது, வறட்சி நிவாரணம் முழுமையாக விடுதலின்றி அனைத்து பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டது போன்ற பல்வேறு இனங்கள் குறித்து மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்கள். மேலும், விவசாயிகளுக்கு தேவையான அனைத்து இடுபொருட்கள் மற்றும் விவசாய கருவிகள் போன்றவை தங்கு தடையின்றி விவசாயிகளுக்கு கிடைத்திட கூட்டுறவுத்துறை அலுவலர்கள் எவ்வித புகார்களுக்கும் இடம் அளிக்காமல் போர்கால அடிப்படையில் செயல்பட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

நடப்பாண்டில் ரூ.4500 கோடிக்கு பயிர்க் கடன் வழங்க திட்டமிடப்பட்டு 22.07.2013 வரை ரூ. 760.78 கோடிக்கு பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 1,64,369 விவசாயிகள் பயன் பெற்று உள்ளனர். மேலும் 23,535 ஆதிதிராவிட இனத்தவருக்கு ரூ.81.65 கோடியும் பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து விவசாயிகளுக்கும் கடன் வழங்கும் பொருட்டு ஆதாரக் குறைவு மற்றும் நிதி சமமின்மை இருத்தல் கூடாது போன்ற நிபந்தனைகள் தளர்த்தப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளுக்காக நடப்பாண்டில் நபார்டு வங்கி ரூ.2300 கோடி அளவிற்கும், தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி ரூ.1053 கோடி அளவிற்கும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிதி உதவி அனுமதித்துள்ளன. விவசாயிகளுக்கு தேவையான உரம் வழங்க தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் பின்வரும் வகையில் உரம் இருப்பு வைத்துள்ளது.

| | | |
|---|---|---|
| யூரியா | – | 37789 டன்கள் |
| டிஏபி | – | 36266 டன்கள் |
| பொட்டாஷ் | – | 16443 டன்கள் |
| காம்ப்ளக்ஸ் | – | 28918 டன்கள் |
| கூடுதல் | | 119436 டன்கள் |

<u>**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து விவசாயிகளும் கடன் பெறும் பொருட்டு பின்வரும் ஆணைகளை வழங்கியுள்ளார்கள் என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தெரிவித்தார்.**</u>

1) மத்திய கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கடன் பெற்று கடன்களில் ஆதாரக் குறைவு மற்றும் நிதிச் சமமின்மை உள்ள அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த அனைத்து விவசாயிகளும் கடன் பெறலாம்.
2) கடந்த மூன்று ஆண்டுகளில் தணிக்கை முடிக்கப்படாத அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் விவசாயிகள் தொடர்ந்து கடன் பெறலாம்.
3) 31.3.2013ல் மத்திய கூட்டுறவு வங்கிகளின் கேட்பில் 10 சதவிகிதம் கூட வசூல் செய்யாத தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களைச் சேர்ந்த அனைத்து விவசாயிகளும் தொடர்ந்து பயிர்க்கடன் வழங்கப்படும்.
4) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கடன் பெற்ற முதன்மைக் கடன் தாரர்கள் கடனை திரும்பச் செலுத்தாத நிலையில் பிணையதாரர் தனது கடனை திரும்பச் செலுத்தியிருந்தால் அவர் தொடர்ந்து பயிர்க்கடன் பெறலாம்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் திருமதி எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப., அரசு துணைச் செயலாளர் திருமதி சி.டி.மணிமேகலை,இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், திரு.பெ.சீத்தாராமன், இ.ஆ.ப., கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு.எஸ்.ஆசைமணி, தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு.துரை திருஞானம் மற்றும் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காவிரி டெல்டா விவசாயிகளின் நலன் கருதி, வரும் 2.8.2013 அன்று மேட்டூர் அணை திறக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதை தொடர்ந்து மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தலைமையில் இன்று (30.7.2013) தலைமைச் செயலகத்தில் விவசாயிகளுக்கு புதிய கடன்கள், உரம், விதை, பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் விவசாய கருவிகள் தடையின்றி கிடைக்க கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களுடன் அவசர ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் திருமதி எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப., அரசு துணைச் செயலாளர் திருமதி சி.டி.மணிமேகலை,இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், திரு.பெ.சீத்தாராமன், இ.ஆ.ப., மற்றும் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9